egistered No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 28—No. 5

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 28 | மன்மத வைகாசி 1955 மே | இதழ் 5

உள்ளுறை — பக்கம்


| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| திருமுறைகண்ட திருமறைநம்பி | ... | 161 |
| நான்காம் திருமுறை காட்டும் நன்னெறி | ... | 164 |
| பால்பானைமேல் வால்பூனை | ... | 170 |
| சர் பொன்னம்பலம் அருணசலம் | ... | 173 |
| திருப்பணி மஹா கும்பாபிஷேகம்—சிதம்பரம் | ... | 175 |
| சிவாலயபூஜை விளக்கம் | ... | 177 |


பத்திராசிரியர்: ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்

192, லாயிட் ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

# திருமுறைகள் வாங்கிப் பரிசுகள் பெறுக

## ஆயிரம் ரூபா பரிசுத்திட்டம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அடங்கிய முதல் ஒன்பது திருமுறைகளையும் பெரியபுராணத்தையும் வாங்குவோருக்கு ஒரு பரிசுத்திட்டத்தை நமது சமாஜம் ஏற்பாடு செய்துள்ளது. முதல் ஒன்பது திருமுறைகளின் விலை ரூபா எட்டு, பெரியபுராணம் விலை ரூபா மூன்று. இவற்றை ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் பெறுதற்குத் தபாற்செலவு ரூ. இரண்டரை. ஆ. ரூ. 13–8–0 முன்பணமாக அனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய புத்தகங்களும், எண் குறித்துள்ள ஒரு டிக்கெட்டும் அனுப்பப்படும். ஆயிரம் டிக்கெட்டுகள் இவ்வாறு செலவானவுடன், "சித்தாந்தம்" பத்திரிகையில் குறிக்கப்படும் ஒரு பொது இடத்தில் ஒரு விடுமுறை நாளில் டிக்கெட்டு எண்கள் குலுக்கப்பட்டு, அவற்றுள் முதலாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. அறுநூறு முதற் பரிசாகவும், இரண்டாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. இருநூற்றைம்பது இரண்டாம் பரிசாகவும், மூன்றாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. நூற்றைம்பது மூன்றாம் பரிசாகவும் அளிக்கப்பெறும். இப்பரிசுகள் பெறுதற்குச் சமாஜ அங்கத்தினரும், வேறு பொது மக்கள் எல்லோரும் தகுதியுடையவராவர், வி. பி. மூலமோ, ரயில்வே பார்சல் மூலமோ புத்தகங்கள் அனுப்பப்படமாட்டா. மேற்கூறிய புத்தகங்களோடு சமாஜ இதர வெளியீடுகளையும், நாலாயிர திவ்யப்ரபந்தம் திருப்பாவை வியாக்யானம் முதலியவைகளையும் வாங்குவோருக்கும் இப்பரிசுத் திட்டத்தில் இடமுண்டு. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கெட்டுகள் விற்றுமுடிகின்றனவோ, அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்குக. இலங்கை நண்பர்கள் இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதில் பலதடைகளும் தாமதமு மிருப்பதால், அவர்கள் மட்டும் வி. பி. தபால் மூலம் புத்தகங்களைப் பெறலாம். மணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம் :— திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை–1. இங்ஙனம் : ச. சிவகுமாரன், காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம் ; ம. பாலசுப்பிரமணியன், பத்திராசிரியன், "சித்தாந்தம்" 10—5—1955.

Regd. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 28 | மன்மத வைகாசி 1955 மே | இதழ் 5

## திருமுறைகண்ட திருமறைநம்பி

பத்திராசிரியர்

சைவ சித்தாந்த சமயத்திற்கு அடிப்படையில் ஆதாரமான நூல்கள், பன்னிரு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும், அவற்றிற்கு மாறுபடாத கருத்துடைய வேத சிவாகமப் பகுதிகளும் ஆகும். இவற்றுள் திருமுறைகள் பன்னிரண்டு என்பதை நாம் நன்கறிவோம்.

ஒவ்வோராண்டிலும் வைகாசிப் புனர்பூசமும் பூசமும் மிகச் சிறந்த சைவர் திருநாட்கள் ஆகும். இவை முறையே நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் சுவாமிகள் திருநட்சத்திரங்கள் என்பதை, சைவ மக்கள் நன்கறிவர். சேக்கிழார் சுவாமிகளைப் பற்றி விரிவாகச் சென்ற ஆண்டில் வெளியிட நேர்ந்தது. இவ்வாண்டில் நம்பியாண்டார் நம்பிகளைப் பற்றிச் சில குறிப்புக்கள் வெளியிடுதல் பொருத்தம். இவர் திருநட்சத்திரம் 25-5-55-ல் நிகழும். அன்று திருமுறைகண்ட புராணத்தையும், நம்பிகள் திருவாக்காகிய பதினோராம் திருமுறைப் பகுதிகளையும் பாராயணம் செய்தல் நமது கடமைகளில் ஒன்று.

நம்பியாண்டார் நம்பிகள் வரலாறு கவர்ச்சிமிக்கதொன்று. சைவப் பேரிளைஞர்கள் புகலியர்கோன், மெய்கண்டார் பெருமை இவருக்கும் உண்டு. இவர் சிதம்பரத்திற்குப் பத்து மைல் தொலைவிலுள்ள திருநாரையூரில் அவதரித்தவர். இவருடைய தந்தையார் அத்தலத்தில் திருக்கோயில் பூஜை செய்யும் சிவாசாரிய குலத்தவர். நம்பி

களுக்கு உபநயனம் செய்து, வேதம் ஓதும் கல்வி பயில்விக்கச் செய்தார். ஒருநாள் தந்தை வெளியூருக்குப் போக நேர்ந்தது. மைந்தனிடம் கோயில் பூஜையைச் செய்யும்படி கட்டளையிட்டுச் சென்றார். நம்பிகளும் முதன் முதலாகப் பிள்ளையாருக்குத் திருமுழுக்காட்டி நிவேதனத்தை எதிரில் வைத்து, "எம்பெருமான் அமுது செயவேண்டும்" என்று இறைஞ்சினார். பிள்ளையார் அமுது செய்திலர். நம்பிகள் இதைக்கண்டு, வெம்பிய உள்ளத்தோடு "ஏதேனும் தவறு இங்கு உண்டோ வேழமுகனே, அடியேன் நிவேதித்திட்ட பம்பமுதம் உண்ணாததென்னை ?" என்று பரிந்து தலையைக் கல்மீது மோதப்புகுந்தார். உடனே விநாயகர் "நம்பி பொறு" எனத் தடுத்து, அவ்வமுத மெல்லாம் அருந்தினார். இதைக் கண்ட நம்பிகள், உவந்த உள்ளத்தோடு"எந்தையே, இனி அடியேன் பள்ளிக்கு ஏகில் எங்கள் தேசிகன் அடிப்பான், ஆதலாலே, சந்தமறை முதற் கலைகள் நீயே ஓதித் தரல் வேண்டும்" என விண்ணப்பித்தார். பிள்ளையாரும் அவ்வாறே ஓதுவித்தார். இவ்வாறே நாள்தோறும் நிகழ்ந்தது.

இந்தச் செய்தி சோழநாடு முழுமையும் பரவியது. சோழ மன்னனாகிய முதல் இராசராசன் காதிற்கும் எட்டியது. மன்னன் தேவார முதலிகள் மூவர் திருவாக்கில் சிற்சில பதிகங்களை அன்பர்கள் ஓதக்கேட்டு, கையிரண்டும் உச்சிமேலேறக் கண்ணீர் கரைந்தோட, மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப, ஐயன் மலர்ப்பதம் உளத்தேகொண்டு போற்றும் பழக்கம் உடையவன். திருமுறைகளைத் தேட, அவை எங்கும் அகப்படாமையாலே நையும் மனத்தினனாகி வருந்தினான். நம்பியாண்டார் நம்பிகள் வரலாற்றைக் கேட்ட பிறகு அவரைக்கொண்டு திருமுறைகளைப் பெறலாம் என்று உள்ளம் தேறினான். திருநாரையூர் சென்று அத்தலத்திற்கு எல்லாதிக்குக்களிலும் பதின்காத அகல எல்லை மூக்கனிகள் முதலியவற்றை நிரம்பவைத்து அவைகளை பிள்ளையாருக்கு நிவேதிக்கும்படி நம்பிகளைவேண்டிக் கொண்டான். நம்பிகளும் நாற்சுத்தி செய்து நிவேதித்தார். தும்பிக்கை புறப்பட்டு எல்லாவற்றையும் உட்கொண்டது. அகநெகிழ மெய்யரும்பிக் கண்ணீர் வார நம்பிகழல் அன்பினால் அரசன் போற்றி மிகவுமொரு விண்ணப்பம் அடி

யேற் குண்டு. வேதியனே, கேள் என்று விளம்புவான் மெய்ப்புகழதுசேர் மூவர் தமிழ்த் தொண்டர் செய்தி பூதலத்தில் விளங்க எனப் போற்றி நின்றான்." நம்பிகள் விநாயகரிடம் சென்று விண்ணப்பித்தார். விநாயகரும் தில்லைக் கூத்தன் திருச்சிற்றம்பலத்துக்குப்"புறக்கடையின் பாங்கர்க் கோல மலர்க்கைகள் அடையாளமாகச் சார்ந்தன " என்று அருள் செய்து வரலாற்று விவரங்களையும் விளக்கினார். அரசனும் நம்பிகளும் தில்லைவாழ் அந்தணரிடம் கேட்டார்கள். தில்லை மூவாயிரவர் " தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும் " என்றனர். அரசனும் " அம்பலவர்க்குற்ற செல்வ விழா எடுத்து விளம்புதமிழ் மூவர்தம்மை உய்த்து அணிவீதிதனில் உலாவருவித்து உம்பர் நாயகன் தன் கோயில் வலமாக்கி உள்ளே சித்தமெலாம் உருக்கு தமிழ் இருக்கை " சேர்த்தான், அறையை இனி திறக்கலாம் என்றான். அறை திறக்கப்பட்டது. " பொய்யுடையோர் அறிவுதனைப் புலன்கள் மூடும் பொற்பது போல் போதமிகும் பாடல் தன்னை நொய்ய சிறுவன் மீகம் மூடக்கண்டு" வேந்தன் சிந்தை நொந்தான். மேலே படிந்திருந்த மண்மலையைச் சேரத்தள்ளி, திலதைலம் கொண்டு செல்லுநனையச் சொரிந்து திரு ஏடெல்லாம் எடுத்து நோக்க ஏடு பழுதாகக் கண்டு மன்னன் சிந்தை தளர்ந்து கண்ணீர் சோர நின்றான். உடனே அசரீரி வாக்கு ஒன்று " மண் மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம் " என்று உலகிலுள்ள மாந்தரொடு மன்னவனும் கேட்குமாறு கூறிற்று. அந்த மொழி கேட்டலுமே மன்னன் தானும் ஆடினான், பாடினான், நெஞ்சம் தேறினான், நம்பி திருவடியில் தாழ்ந்தான். எழில் முறையை முன்போல வகுக்க எண்ணினான்.

காழிவேந்தர் திருவாக்கை முதல் மூன்று திருமுறைகளாகவும், வாகீசர் திருவாக்கை அடுத்த மூன்று திருமுறைகளாகவும் நம்பியாரூரர் திருவாக்கை ஏழாந்திருமுறையாகவும், திருவாசகத்தையும், கோவைத் திருவாசகத்தையும் எட்டாந் திருமுறையாகவும் திருவிசைப்பாவையும் திருப்பல்லாண்டையும் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், நம்பியாண்டார் நம்பிகளும், இராசராச மன்னனும் வகுத்தார்கள்.

பின்பு மன்னன் நம்பிகளை வணங்கி, "சித்திதரும் இறை மொழிந்த திருமுகப்பாசுரம் முதலாம் உய்த்த பதிகங்களை யும் ஒரு முறையாச் செய்க" என வேண்டினான். அவ் வாறே திருமுகப்பாசுரம் முதலாகவும் நம்பியாண்டார் நம்பி கள் திருவாக்கு அனைத்தையும் ஈறாகவும் கொண்ட நாற்பது பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையாகத் தொகுக்கப் பட்டன. திரு எருக்கத்தம் புலியூர் சென்று, திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த வல்லி ஒருத்தியை இறை அருளால் பெற்று, திருமுறைகளைப் பண்முறையில் ஒழுங்கு படுத்தினர்.

இராசராச மன்னன் வழித் தோன்றலாகிய இரண் டாம் குலோத்துங்கன் என்னும் அநபாய சோழன், தனது முதல் மந்திரியாகிய சேக்கிழார் பெருமான் அருளிய திருத் தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாந் திருமுறையாக வகுத்தான். அன்று முதல் சைவத் திருமுறைகள் பன்னி ரண்டு எனும் கணக்கே இன்றுவரை நிலவி வருகின்றது. திருமுறைகண்ட திருமறைநம்பி திருவடி வாழ்க.

---

# நான்காம் திருமுறை காட்டும் நன்னெறி

M.P.T. தியாகராஜன், B.A.

சைவ பரமாசாரியர்களாய் விளங்கிய நால்வருள் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவா ரங்களை நான்கு ஐந்து ஆறு திருமுறைகளாக வகுத்துள் ளார்கள். சுவாமிகளவர்கள் திருவதிகை வீரட்டானத்தில் வீரட்டனரடி போற்றிப் பாடிய திருப்பதிகங்களை வியந்து பரமசிவமே அவர்களுக்குத் திருநாவுக்கரசர் என்ற திருநாம மளித்தார் என்று கூறுவதால் அப்பதிகங்களாலல்லது சிவ பெருமானைப் புகழுமாறு எங்ஙனம்? "நாவுக்கரசென்றுல கேழினும் நின்நாமம் நயப்புற மன்னுக" என்று அருளப் பெற்ற பான்மைவாய்ந்த அவர்களுடைய பாடல்களைப் பாராயணமாக நித்தம் ஓதுதல் சைவநெறி நின்றொழுகு வார்க்கின்றியமையாதது. அப்படி ஓதுங்கால் அப்பாடல் களில் பல உண்மைகளைக் காணலாம்.

சிவபெருமானை வழிபட்டு வாழ்தலே நன்னெறியெனக் கண்ட பரமசமயாசாரியர்கள் அந்நெறியாம் நன்னெறியை உலகமெலாம் பரவச்செய்யச் சிவாலயங்கள் தோறும் சென்று ஆங்காங்குள்ள மூர்த்தியை வாயாரப் புகழ்ந்து பாடி அதன்வழி சைவநெறியின் பல உண்மைகளைப் போதித்து வந்தார்கள். ஒரு நெறியைப் போதிக்கவேண்டுமானால் அந்நெறி நின்று நாம் வாழ்ந்து காட்டவேண்டும். நெற்றிக்கு நீறணியாதவர் திருநீற்றின் பெருமையை எவ்வாறு விளக்கமுடியும்? அப்படி உண்மை உணர்ச்சியோடு சைவர்களாயுள்ள அன்பர்கள் வாழ்ந்து வழிகாட்ட வேண்டுமானால் அவ்வழியின் சிறப்பை நன்குணரவேண்டும். பரமசமயாசரியர்கள் காட்டிய வழிதான் என்ன என்று அவர்கள் பாடல்களைத் துருவி ஆராய்ந்து தெளிதல் வேண்டும்.

அந்தக் கண்கொண்டு நான்காம் திருமுறையைப் பாராயாணம் செய்வோமானால் பல அரிய உண்மைகள் நமக்குப் புலனாகும். எம்மதமும் சம்மதம், எல்லாத்தெய்வ பேதங்களும் ஒன்று என்று பெருந்தன்மையோடு பேசலாம். எனினும் "சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனியம்மான்" என்றும், "உனையல்லால் ஒருதெய்வம் உள்கேனென்றும்" அலறும்படியாகப் போதிக்கும் நம் பரமாசாரியர்களின் கருத்துச் சைவத்தையே சிறப்பாகக் கொள்ள வேண்டுமென்பதுதான். சுந்தரமூர்த்திசுவாமிகள் எங்கிருந்த போதிலும் திருவாரூர்ப்பெருமானையே விழைந்து அம்மூர்த்தியைக் காணாமல் திருஒற்றியூரிலிருக்கப் பொறாது தாம்செய்த சபதத்தையும் மீறித் திருவாரூரை நாடி வெளிப்பட்டாரெனின், ஒரு மூர்த்தியைத் தம்மிஷ்ட தெய்வமாகக் கொண்டு அதன்பால் தம்முழு அன்பையும் செலுத்த வேண்டுமென்று அவர் காட்டினரன்றோ? எனவே சைவர்கள் சிவபெருமானை வேறு தெய்வங்களோடு ஒப்பிட்டுப் பேசுவதோ, சிவனடியார்களை ஏனைய பக்தர்களுடன் ஒப்புமைப்படுத்துவதோ, சிவனுடைய தோத்திரங்களைத் தவிர்த்து வேறு தோத்திரங்களைப் படிப்பதோ,'வேறு கதைகளைக் கேட்பதோ கூடாது. பெரியபுராணத்திலுள்ள உண்மைகளை யெடுத்துப் பேசும்போது, இராமாயணத்தில் கம்பர் சொல்லியுள்ள நீதிகளையும் கீதையில் கிருஷ்ணன்

கூறும் உபதேசங்களையும் அவற்றுடன் ஒப்புமைப்படுத்தி மகிழ்ச்சியடைவானேன்? ஒப்புமை வேண்டா, சிறப்புடையனவாக நம் சைவ நூல்கள் திகழ்கின்றன. பன்னிரு திருமுறைகளையே நமக்கு ஆதாரமாகக் கொண்டு சின்னங்களாகிய விபூதி ருத்ராக்கத்தை மகிழ்ச்சியுடன் அணிந்துகொள்வதோடு, நீறில்லா நெற்றியினைக் காணும்போது அப்படிப்பட்டவர்களுக்குதவக்கையில் விபூதிப்பை ஒன்று வைத்திருத்தல் வேண்டும். சைவர்கள் கொள்ளவேண்டிய முக்கிய கடமைகளுள் மேற்கூறியவை எல்லோராலும் செய்யத்தக்கனவாகும்.

நிற்க. நான்காம் திருமுறையில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் யாவையென்று கவனிப்போம். முதலாவதாகத் திருவங்கமாலையில் அங்கங்களுக்கு இட்டுள்ள பணியைச் செய்யவேண்டும். அவற்றுள் முக்கியமாகக் கைகளுக்குக் கொடுத்துள்ளவேலை ஆக்கைக்கே பயன் தருவதாக இருக்கிறதென்று காண்கிறோம்.

''ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாத இவ்வாக்கை யாற்பயனென்''

பூக்கையாலட்டிப் போற்றுவது ஆக்கைக்கே ஒரு பெரும் பயனைத் தரவல்லது. அது சிவபுண்ணியமெனப் பத்தாம் திருமுறையும் கூறுகிறது.

'' புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள் செயாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறியாமல் நழுவு கின்றாரே''

திருமூலர் ஒருவருஷம் சிந்தித்து மேற்படி பாடலைப் பாடியுள்ளாரென்றால் அதனுள் பொதிந்து கிடக்கும் கருத்து எத்துணைப் பெருமையுடையதென்று நாம் கொள்ளவேண்டும். சிவபுண்ணியஞ் செய்யவேண்டுமானால் அம்மூர்த்தியை நீரினால் ஆட்டிப் பூவினால் அர்ச்சனைகள் செய்யவேண்டும். அப்படிச்செய்யாதார் புண்ணியஞ் செய்பவர்களாகவே கருதப்படார், பாவிகள் என்றே திட்டமாகக் கூறுகிறார்.

மேலும் திருஞானசம்பந்தரும் இந்த உண்மையைப் பின்வரும் பாடலால் எடுத்துக்காட்டுகிறார்.

பாவமேவு முள்ளமோடு பக்தியின்றி நித்தலும்
ஏவமான செய்து சாவதன் முனம் இசைந்துநீர்
தீபமாலை தூபமுஞ் செறிந்தகைய ராகிநந்
தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே.

தீபமாலை தூபமுடன் செறிந்த கையராகிப் பக்தி செய்வ தால் மட்டுமே பாவமேவு முள்ளம் சுத்தப்படும் என்பது இப்பாடலின் முடிபு.

" பெரும்புலர் காலைமூழ்கி பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டங் கார்வத்தையுள்ளேவைத்து
விரும்பி நல்விளக்குத் தூபம் விதியினாலிட வல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே"

நித்தம் காலையிலெழுந்து நல்லதீர்த்தங்களில் நீராடிப் பக்தியுடன் மலர்கள் தூவி தூப தீபங்களுடன் ஆராதிக்க வேண்டும். புலர்வதன் முன் எம்பிரானுடைய கோயில் புக்கு அலகிட்டு, மெழுகுமிட்டு பூமாலை புனைந்தேத்தி வழி படவேண்டுமென்றும் அதுவே மனம் நிலைபெறுதற்கு வழி யென்றும் ஒரு திருத்தாண்டகம் கூறுகிறது.

எனவே சிவபெருமானை வழிபடுவதற்குரிய நேரம் சூரியோதயத்திற்கு முன்னென்று பெறப்படும். திருமாலே ஒரு சமயம் பூக்கொண்டு சிவபெருமானை அருச்சித்துச் சக் கரம் பெற்றனர் என்பதை தம்பாடலில் நினைப்பூட்டுகிறார்.

" நீற்றினை நிறையப்பூசி நித்தலாயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி யொருநா ளொன்று குறையக் கண்ணி றையவிட்ட
ஆற்றலுக் காழி நல்கியவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர் வீழிமிழலையுள் விகிர்தனாரே"

" தோடுலா மலர்கடூவித் தொழுதெழு மார்க்கண்டேயன் "

என்றும் கூறுவதால் எம்பிரான் அருள் பெறுதற்கு மலர் கொண்டர்ச்சிப்பது ஒரு சிறந்த நெறியென்பது பெறப் படும். அன்பின் உருவாய கண்ணப்பர், வாய்கலசமாக நீரெடுத்துவந்து மலர்களைத் தலையிற் சூடிக்கொணர்ந்து அபி ஷேக அச்சனைகள் செய்தாரெனின் நாம் அன்பால் நினைப் பது எவ்வண்ணம் அமையும்? " கோவிலுக்குப் போவ தில்லை, பூஜைகள் செய்வதில்லை, சதா ஆண்டவனை அன்பால் நினைத்தால் போதாதா?" என்பவர்களை என்னென்று கொள்வது?

" தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரி நன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்புசாத்தி
இண்டை கொண்டேற நோக்கி யீசனை யெம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே "

அப்படித் தொண்டுபுரியாத காலம் வீண்காலம். எனவே வழிபாடு இவ்வண்ணம் செய்வதே நல்லதெனக் கூறியுள்ளார்.

தாமே அவ்வாறெல்லாம் செய்ததாகத் திருப்பெருவேளூர்ப் பதிகத்தில் பாடியுள்ளார்.

வழிபாடு செய்துவிட்டு இறைவனை என்ன கேட்க வேண்டும்?

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமைசெய்ய
எந்தைநீ யருளிச் செய்யாயாது நான்செய்வ தென்னே

என்று அவனருளால் சித்தசுத்தியடைய வேண்டும் என்ற பிரார்த்தனையிருத்தல் வேண்டும். பூசனிக்காய் எவ்வளவு தான் பழுத்துக் காய்ந்துபோனாலும் கொடியைவிட்டு விழுவதில்லை. அதைத் தோட்டக்காரன் கத்திகொண்டறுத்து விடுபடுத்த வேண்டுவதே போன்று நம்பாசத்தளையை நீக்கச் சிவபெருமான் ஒருவனே அருள்புரியவேண்டுமென்று வடமொழியில் ஒரு மந்திரம் கூறுகிறது. அதைவிடுத்துப் பாசத்தை அதிகப்படுத்தும் முறையில் இறைவனிடம் நம் அல்லல்களையும் குடும்பத் தொல்லைகளையும் கொட்டியளப் போமானால் அவை பெருகுமே யொழியக் குறையா. அப்படிப் பெருக்கிக் கொள்ளுவதாலேயே பலர் இறைவனுக்கு இரக்கமில்லையென்று முடிவு கட்டிவிடுகின்றனர். மற்றும் சிலர் இறைவனில்லவேயில்லை யென்று தீர்மானித்து விடுகின்றனர்.

பூஜைகள் முடிந்தவுடன் இறைவனை பாசத்தளை நீக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து,

" மன்னுவான் மறைகளோதி மனத்தினுள் விளக்கொன்றேற்றி
உன்னுவா ருள்ளத்துள்ளா ரொற்றியூ ருடைய கோவே "

" உள்ளத்தீ யொன்றேற்றி யுணருமா றுணர வல்லார்
கள்ளத்தைக் கழிப்பர் போலுங் கடவூர் வீரட்டனாரே "

" உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக
மடம்படு முணர் நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி

இடம்படு ஞானத்தீயால் எரிகோள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

என்றபடி உளத்தே விளக்கொளி கண்டு தியானிப்பதுவே சிவயோகமாகும். காணுமளவும் பாவித்தும் பழகலாம்.

ஆகவே திருநாவுக்கரசர் காட்டியுள்ள வழியின்படி இல்லறத்திலிருப்போர் ஒரு மூர்த்தியைக் காலையிலெழுந்து நீரினால் அபிஷேகம் செய்து மலர் கொண்டர்ச்சித்துத் திருமுறைகளிலிருந்து சிலபாடல்களை ஓதி, உள்ளத்தே விளக்கொளி விளங்க இருந்து நோக்கி, மாலைநேரத்தில் ஒரு சிவாலயம் சென்று அங்குள்ள மூர்த்திக்குச் செய்யும் அபிஷேக ஆராதனைகளை மனமாரக்கண்டு, தீபாராதனைக் காலத்து ஒன்று இரண்டு மூன்றாகவும் பலவாகவும் காட்டும் தீபங்களை அகத்துள் நினைத்தபடி தரிசனம் செய்து வரவேண்டும். அப்படிச்செய்துவருவதின்பயன் பின்வருமாறு ஒருசமயம் மகிழ்ச்சியுடன் கூறுதலேயாகும்.

"உறுகயிறூசல் போல வொன்றுவிட் டொன்றுபற்றி
மறுகயிறூசல் போலவந்து வந்துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல்போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூசலானே னதிகை வீரட்ட னீரே"

மனமெனும் ஊஞ்சல் பாசத்தனை கொண்டு பிணிக்கப்பட்டு அந்தரத்திலாடிக்கொண்டிருக்கிறது. அதை நிறுத்த வேண்டும் என்று கூறும் யோக உபாயமெல்லாம், பாசத்தனையறுபடாமல் ஈர்த்துப்பிடித்து நிறுத்தியுள்ள ஊஞ்சல் போல மனம் நிற்கும். சாதனைகள் நின்ற ஞான்று மறுபடியும் மனம் அலைவுறும். ஆகவே மனம் எனும் ஊஞ்சற் பலகையின்மேல் திருத்தொண்டென்னும் பாரத்தை நிறுத்த வேண்டும். திருத்தொண்டுகளின் கனம் பெருகப் பெருக, ஆடிக்கொண்டுள்ள மனம் பாசத்தனை அறுபட்டு இறைவன் பாதத்தில் விழும். அப்போதே இறைவனடி சேர்ந்தவர்களாக ஆகமுடியும்.

அதுவே சைவ நெறியாகும். மற்றும் சைவர்களாயுள்ள ஒவ்வொருவரும் சிவ சின்னங்களாகிய விபூதி ருத்ராக்கத்தை மகிழ்ச்சியுடன் தரித்துக்கொள்ளவேண்டும். நீறில்லா நெற்றியினரைக் காணும்போது அவர்களுக்குதவத்

தம்மிடத்து ஒரு விபூதிப் பையொன்று வைத்திருத்தல் வேண்டும். "சொற்றுணை மாலைகொண்டு தொழு தெழு வார்கட்கெல்லாம் நற்றுணையாவர் போலும் நாகவீச்சரவ னாரே" என்று திருநாவுக்கரசரே திருவாய்மலர்ந்தருளி யுள்ளமையால் அவர்கள் பாடியுள்ள "சொற்றுணை வேதி யன்" என்று தொடங்கும் பத்துப் பாடல்களையும் காலை யெழுந்தவுடன் பாராயணம் செய்தல் வேண்டும். "தொழுதெழுதல்" பழக்கம் எளிதிலமையாது. நித்திரை கலைதல் சிவசிந்தனையால் கலைதல்வேண்டுமெனின் எவ் வளவு பண்பாடு வேண்டும்? அப்படி நித்திரை கலைவது கொழுநனைத் தொழுது எழும் எண்ணத்தோடு இருப் பதையே திருவள்ளுவர் "கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்று கூறினார். சிவ சிந்தனையுடன் நித்திரை கலைதல் முடியவில்லையானாலும் எழுந்தவுடன் சிவ சிந்தனைவர, நமச்சிவாயப் பதிகத்தை ஓதவேண்டும்.

தேவாரத் திருமுறைகள் தோத்திரப்பாடல்களாகக் காணப்பட்டாலும் சைவ நெறியை சாஸ்திரக் கருத்தின் படி நன்கு விளக்குகின்றன. அவைகளை அடிக்கடி பாரா யணம் செய்வதால் நமக்கு அவைகளில் பொதிந்துள்ள நுண்ணிய கருத்துக்கள் புலனாகும். அவைகளையே நாம் ஆதாரமாகக் கொண்டு சைவ நன்னெறியைக் கடைப்பிடித் தொழுகவேண்டும்.

---

# பால்பாளைமேல் வால்பூனை

ஆ. அப்பாதுரை

அன்று வெள்ளிக்கிழமை. மாயூரம் ரயிலடியிலே ஓரே கூட்டம். அதுவுமல்லாமல் பட்டணத்து ரயிலும், அப் போதுதான் வந்து நின்றது. மெதுவாகக் கூட்டத்தை விலக்கிக்கொண்டு மாடிப்படி ஏறி இரண்டாவது பிளாட் பாரத்தை அடைந்தேன். நான் போகவேண்டிய ரயில் வந்து நின்று 5 நிமிட நேரமிருக்கலாம். நல்ல வேளையாக உட்காருவதற்கு இடம் கிடைத்தது. சிறிது நேரத்திற்

கெல்லாம் ஒரு நீண்ட பெருமூச்சுடன் மாயூரத்தை விட்டகன்றது வண்டி.

பக்கத்தில் ஒரு வயதானவர், அவரைப்பார்த்தால்மிகுந்த பக்தியுடையவர்போல் தோன்றிற்று. எனக்கு அவரோடு அளவளாவ வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ஆகவே, 'நமக்குளென்ன ஊருங்க ?' என்றேன் மெதுவாக.

'திருவாரூருக்கு அண்மையிலுள்ள குளிக்கரை, அங்கேதான் போகிறேன்' என்றார்.

எங்கள் பேச்சு தொடர்ந்துகொண்டே போயிற்று. திருவருளைப் பற்றியெல்லாம் சொல்லிக்கொண்டே வந்தார். இடையிலே இக்கால மக்களைப் பற்றியும் அவர்களின் நிலையானது பானைமேலுள்ள பூனையின் நிலையைப் போலுள்ளது என்றெல்லாம் சொன்னார்.

'பானைமேல் பூனையா ?' என்று ஆச்சரியத்தோடு இழுத்தேன்.

'ஆமாம்' என்றபடியே ஆரம்பித்தார்.

'வடக்கு பார்த்த ஓர் கூரை வீடு. கூரை வீடு என்றாலே மண்தரை என்றுதானே உனக்கு ஞாபகம் வருகிறது ? ஆமாம், அந்த வீடு மண் தரையினாலாகியதுதான். அந்த வீட்டுச் சமையலறையில் பால் காய்ந்துகொண்டிருக்கிறது. நன்றாகக் காய்ந்து ஆடைகூட கட்டிவிட்டது. வீட்டில் ஒருவரும் இல்லையென்பதைப் பூட்டியிருந்த பூட்டே சொல்லிற்று. இதுதான் நல்ல சமயம், இதை நழுவவிடக்கூடாது என்று ஒரு வால்பூனை எண்ணியது. பாலைப் பருகவேண்டும் என்ற நோக்கத்துடனே பானைமேல் ஏறிற்று. ஏறிய நேரத்திலே, எதிரே உள்ள ஒரு சுவரில் ஒரு கரப்பான் பூச்சி இருப்பதைக் கண்டது. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற முதுமொழியை அது அறிந்திருந்ததோ, என்னவோ ! பால்தான் நம்மிடம் இருக்கிறதே, முதலில் கரப்பானை ஒழித்து விடலாம் என்ற எண்ணத்துடன் தாவியது. தாவுகின்ற பூனையின் பின்கால்கள் பானைமேல் பட்டு, அந்தப் பானையும் உருண்டு உடைந்துவிட்டது. பாலெல்லாம் நிலத்தோடு ஐக்கியமாகிவிட்டது. மண்தரையோடு கூடிய வீடல்லவா? பூனை பாய்வதைக் கண்ட அந்தக் கரப்பானும் பறந்தோடிவிட்டது' என்றார் அப்பெரியவர்.

'ஐயோ, பாவம்! உள்ளதும் போய்விட்டது. வால் பூனை பால்பானையை இழந்ததுமன்றி கரப்பானையும் இழந்துவிட்டதா' என்றேன். இதற்குள் ரயில் நன்னிலத்தையும் தாண்டிவிட்டது. மீண்டும் ஆரம்பித்தார்.

"தம்பி! மேலே பானை பூனையால் உடைந்ததையும், கரப்பான் பூச்சி பறந்தோடியதையும் கண்டார் ஒருவர். அவர்தான் சந்தான குரவருள் எட்டு நூல்களை அருளிய உமாபதி சிவாசாரியார். மேலே நான் சொன்ன விஷயத்தை அவர் நேரே கண்டதும், அவருடைய மனம் சிந்திக்கத் தொடங்கியது. அவர் பானையை இப் பாருலகத்திற்கு உவமை என்றார். பானையின் கண்ணுள்ள பாலை இவ்வுலக வாழ்க்கையிற் கிடைத்தற்கரிய சிவாநுபவம் என்றார். வால்பூனையை ஆன்மாவிற்கும் கரப்பானை உலக வாழ்வில் உயிரை மயக்கும் பாசத்திற்கும் ஒப்பிட்டார். "தம்பி! அரிது, அரிது, மானிடராய்ப் பிறத்தலரிது என்பது போலக் கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை அடைந்த நாம் பால் போன்ற சிவாநுபவத்தை அடைய முயற்சிக்காமல், சாதாரணமாக உலக சிற்றின்பம் என்று கூறப்படுகின்ற துன்பத்தையடைய முயற்சிக்கிறோம். அவ்வாறு முயலும்போது அந்த உலக இன்பமும், கிடைக்காமற் போகிறது."

"எப்படி வால்பூனையானது பால்பானையின் கண்ணுள்ள பாலை விட்டுக் கரப்பானை நாடுகின்றதோ அதே போல் ஆன்மாவானது பேரின்பமாம் சிவாநுபவத்தை விட்டு, மும்மலத்துழலும் உலகச் சிற்றின்பத்தை நாடுகின்றது" என்று இப்பெரியார் சொல்லி இந்த உவமையை உமாபதி சிவாச்சாரியார் 'திருவருட்பயன்' என்னும் சாத்திர நூலில்,

> 'பாப்பமைந்து கேண்மின் இது பாற்கலன் மேல்பூனை
> கரப்பருந்த நாடும் கடன்'

என்ற ஒரு குறளில் வைத்ததையும் சொல்லி முடிப்பதற்குள் வண்டி ஆரூர் சந்திப்பில் வந்து நின்றது. நானும் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றேன். அவரும் குளிக்கரைக்குப் போய்ச் சேர்ந்தாரென்று அவருடைய கடிதம் சொல்லிற்று.

# சர் பொன்னம்பலம் அருணாசலம்

வட்டுக்கோட்டை - நாகலிங்கம்

(மலர் - 25 ; இதழ் - 4 ; 160-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகச் சங்கத்தினதும் கலைக்குழுவினதும் அங்கத்தினராக இருந்தது மாத்திரமன்றி, கல்லூரி விவகாரங்களுக்காக அதன் எதிர்கால வளர்ச்சியைப் பேணும் பொறுப்பேற்றவர்கட்கு விலைமதிக்க ஒண்ணு ஆலோசனைகள் கூறவும், பல்கலைக் கழகத்தை ஆரம்பிப் பதற்காக உழைக்கவும் அவர் செலவழித்த அரியநேரத்தை யும் சிரமத்தையும் சிந்தனையையும் ஒப்பிட்டுப்பார்க்க முடியா. இத்துறையில் அவரது உழைப்பை மற்றவர்களி லும் பார்க்க நான் நன்கு அறிவேன். இந்நாட்டுக்கு நான் வந்தகாலம் துவக்கம் அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஆகையால் அவர் நமது திட்டத்தின் முழுப்பலனையும் நாம் பெறும்பொருட்டுத் தமது அரிய நேரம், சிரமம், சிந்தனை ஆகியவற்றை செலவழித்தாரென நான் உறுதியுடன் கூறுவேன். அன்பர்களே, அவருடைய வாழ்க்கை எமக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், உணர்ச்சி யூட்டக் கூடியதாகவும் விளங்குகின்றது. சமயத்துறையி லாதல், அரசியல் துறையிலாதல் அவருக்கும் மற்றவர்கட் கும் இடையே கருத்து வேற்றுமை இருந்தபோதிலும், சான்றோர்மாட்டு விளங்கும் மனிதப்பண்புகள் அவர்மாட் டுச் சிறந்து விளங்குகின்றபடியால், நீங்களும் அப் பண்பு களைப் பின்பற்றுதல் வேண்டும். அவர்தம் அரிய பண்பு களில் மனத்திட்பம், செய்வினைத்திட்பம், எண்ணியதை முற்றமுடியச் செய்யும் ஆற்றல் ஆகியவற்றைச் சிறப்பாகச் சொல்லுவேன்.'' இதுகாறும் கூறியவற்றில் இருந்து நமது பெருமகனார் பல்கலைக் கல்லூரியின் பொருட்டு எடுத்துக் கொண்ட பேருழைப்பு நன்கு விளங்குகின்றதன்றோ ?

இனி நம்பெருமகனார் தம் புலமைபற்றியும் அவரது கலாஞானம் குறித்தும் சிறிது சிந்திப்போம். அவர் தமது ஓய்வுநேரமெல்லாம் கலைகளுக்காகச் செலவழித்தார். அர சாங்க சேவைச் சூழலிடை இருந்தபோதிலும், பண்டைய இலக்கியங்களையும், சரித்திரம், புதைபொருள் ஆராய்ச்சி, மேல்நாட்டுக்கீழ்நாட்டுத் தத்துவஞானம் முதலியவற்றையும்

ஓவாது ஆராய்வதிலே காலங்கழித்து வந்தார். இலங்கைச் சரித்திரச் சுருக்கம், சமயதத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும், முதலிய நூல்களே அவரது சிறந்த புலமைக்கு உறுபெருஞ் சான்றுகளாய்த் திகழ்கின்றன.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'

என்னும் மறைமொழிக்கிணங்க, நமது பெருமகனார் தமது வாழ்க்கையை நடத்தினார். ஒரு பொருளைப் பற்றி ஆராயும் போது அதனைப் பலகாலும் அழுத்தமாயும் நுணுக்கமாயும் ஆராயும் பான்மையுடையர். அவர் வாழ்ந்த காலமோ ஆங்கிலமொழி பெருமை அடைந்த காலம். ஆங்கிலங் கற்றவர் தமிழ்மொழியைப் பேசவாதல், அல்லது தமிழ் நூல்களைப் பயிலவாதல் நாணும் காலம். அத்தகைய சூழ் நிலையில் நம்பெருமகனார் தமிழ்மொழியின் கண்ணுள்ள திருக்கோவையார், திருமுருகாற்றுப்படை, கல்லாடம் முதலிய சிறந்த இலக்கியங்களையும் தாயுமானார் பாடல், திருவாசகம் முதலிய சமய அநுபவநூல்களையும் ஐயந்திரிபறக் கற்று, அவற்றில் ஈடுபட்டமை அவர்தம் சமயப்பற்றையும், நுண்மாண் நுழைபுலத்தையும் தெரிக்கின்றதல்லவோ?

இத்துணைச் சீரும் சிறப்பும், சமயப்பற்றும் வாய்க்கப் பெற்ற நம்பெருமகனார் அவர்கள் இந்தியாவின்கண் உள்ள சிவஸ்தலங்களைத் தரிசிக்கும் பொருட்டுத் செல்வாராயினர். அங்ஙனம் யாத்திரை செய்யும்போது மதுரையம்பதியில் இறைவன் திருவடி நீழல் எய்தினார்கள்.

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'

என்றும்,

'எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்'

என்றும்,

'மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல் எனும்சொல்'

என்றும் அருளிச்செய்த வள்ளுவப் பெருந்தகை வாய் மொழிக்கிணங்க நம்பெருமகனாரின் அருமைத் திருமகனா

ராய சர். அருணாசலம் மகாதேவா அவர்களை. இத்தருணத்தில் நாம் மறக்கமுடியாது. மகாதேவா அவர்கள் வாய்மை முதலிய உயர் பெருங்குணங்கள் நிறையப்பெற்று, குன்றின்மேல் இட்ட தீபம்போல் நம்நாட்டிடைச் சுடர்விட்டு விளங்குகின்றார்கள். அவர்தம் பெருமைக் கிணங்க சென்ற கிழமையும் அவருக்கு மகாராணியார் கே. சி. சி. எம். ஜி என்னும் பட்டம் வழங்கியுள்ளார்கள். அவருக்குக் கிடைத்த பெருமைபற்றி நாமெல்லாம் அளவுபடா மகிழ்ச்சியும் இறும்பூதும் எய்துகின்றனம். இத்தகைய பண்புடைமக்கள் வாழ்வினால் அன்றோ நம்வாழ்வும் பெருமையடைகின்றது.

‘ பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.’

---

சிதம்பரம் ஸ்ரீ நடராசப்பெருமான் திருக்கோயில்

## திருப்பணி மஹா கும்பாபிஷேகம்

மன்மதஞ ஆனிமீ 23உ (7—7—55) வியாழக்கிழமை

சிவத்தலங்களுள் ‘ கோயில் ’ என்று சைவத் திருமுறைகளில் சிறப்பித்துப் போற்றப்பெறுவது தில்லையம்பதியாகும். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும் பதஞ்சலி முனிவரும் சைவத் திருமுறையாசிரியர்களும் வேந்தர் குறுநில மன்னர் படைத்தலைவர், அமைச்சர், செல்வர், பொதுமக்கள் ஆகிய எல்லா மக்களும் இப்பதியில் உள்ள பொன்னம்பலத்தில் ஆடல்புரியும் நடராஜப் பெருமானை வழிபட்டு இம்மை மறுமை இன்பங்களை அடைந்துள்ளார்கள். “ மூர்த்தியம்பலக் கூத்தனது உருவே ஏத்திடுந் தலம் எழில் புலியூரே தீர்த்தமென்பது சிவகெங்கையே ” என மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய இம்மூன்றினாலும் முதன்மை பெற்று விளங்குவது பெரும்பெற்றப் புலியூராகிய இச் சிதம்பரமாகும். ஆதலால் தில்லைப் பெருங்கோயில் “ பூலோக கைலாயமென ” ஆன்றோர்களால் போற்றப் பெறுவதாகும். இத் தலத்தில் இறைவன் உலகெலாம் உய்யத் திருநடனம் செய்யும் அருள் நிலையமாக விளங்குவது கனகசபையாகிய பொன்னம்பலமாகும். ஞான ஆகாசமாகத் திகழும் இப் பொன் மன்றத்தை முடிவேந்தர் பலரும் செம்

பொன்னால் வேய்ந்து வழிபட்டுள்ளார்கள். தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் ஆடல்புரியும் கூத்தப்பிரானது அருட்கலையே உலகிலுள்ள திருக்கோயில்கள் எல்லாவற்றிலும் நிலைபெற்று உயிர்களை உய்விக்கின்றது எனவும், ஒவ்வொரு நாளும் அர்த்தயாமத்தில் அவ்வருட்கலைகள் எல்லாம் மீண்டும் இத் தில்லையம்பலத்திலே வந்து ஒடுங்குகின்றன எனவும் அருள் நூல்கள் கூறுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த இத் திருக்கோயிலுக்கு 63 ஆண்டுகளுக்குமுன் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அறுபது ஆண்டுகளுக்கொருமுறை புனருத்தாரணமும் மகாகும்பாபிஷேகமும்செய்து வழிபாடு செய்யவேண்டும் என்ற சாத்திர முறையையொட்டி இப்பொழுது திருப்பணி செய்ய வேண்டியுள்ளது. அதற்கு இணங்கத் திருவருள் கூட்டுவிக்கின்ற இவ்வரிய பேற்றைத் துணைகொண்டு, இவ்வாலயத்துட் சிற்சில இடங்களைத் திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் செய்ய ஆன்றோர்களால் "கும்பாபிஷேகக் கமிட்டி" யொன்று நிறுவப்பெற்றுள்ளது. ஷை கும்பாபிஷேகம் நாளது மன்மதவாண்டு ஆனித் திங்கள் 23உ (7—7—55) வியாழக்கிழமையன்று நடைபெற ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவருளைத் துணைகொண்டு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது.

எல்லாத் திருத்தலங்கட்கும் பொது நிலையமாக விளங்குவதால் 'பொது' எனப் போற்றப்பெறும் இத் திருக்கோயில் திருப்பணியில் இந்நாட்டிலுள்ள எல்லா மக்களும் பங்குகொள்ளுதற்கு உரியராவர். எனவே இவ்வரிய பணியில் சிவநேசச் செல்வர்களும் சீரிய அன்பர் பெருமக்களும் பங்கெடுத்துக்கொண்டு தத்தம் ஆற்றலுக்கு ஏற்பப் பொருளுதவி புரிந்து உதவ வேண்டுகிறோம். ஷை சத் கைங்கரியத்திற்குரிய தொகைகள் "பொக்கிஷதாரர், ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டி, சிதம்பரம்" என்கிற விலாசத்திற்கு அனுப்பும்படி கோரப்படுகிறது. பணம் அனுப்புவோர் S. இரத்தினசாமி செட்டியார், பொருட்காப்பாளர், ஸ்ரீ சபாநாயகர் கோயில் திருப்பணி, கும்பாபிஷேகக் கமிட்டி எனும் விலாசத்திற் கனுப்புக. நமது சமாஜ உறுப்பினர்களனைவரும் பெரும் பொருளுதவி புரிய வேண்டுகிறோம். இங்ஙனம்: சைவ சித்தாந்த மகா சமாஜம்.

# சிவாலயபூஜை விளக்கம்

ம.சுவாமிநாதசிவாசாரியார், திருமயிலைக் கபாலீச்சரம்ஸ்தானீகர்

"மதிதருவ னெஞ்சமே யுஞ்சு போக
வழியாவ திதுகண்டாய் வானோர்க் கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதீ என்றும்
அம்மானே ஆரூரெம்மையா வென்றுந்
துதிசெய்து துன்றுமலர் கொண்டு தூவிச்
சூழும் வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர்மதிசேர் சென்னியனே கால காலா
கற்பகமே யென்றென்றே கதறா நில்லே"

—அப்பர் தேவாரம்

உலகிலுள்ள சமயங்கள் எல்லாவற்றையும் கடந்து சிரம்போல் விளங்குவதும், தானே முடிந்த முடிபானதுமாகிய சமயம் சைவசித்தாந்தமே யாகும். சைவசித்தாந்தத்தில் மோக்ஷமாகிய வீடடைவதற்கு, சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் உள்ளன. அவை, தாசமார்க்கம், சத் புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் எனப் பெயர்பெறும்.

சரியை :—புறத்தொழில் மாத்திரையாற் சிவபெருமானுடைய உருவத்திருமேனியை வழிபடுதல்.

கிரியை :—அகத்தொழில், புறத்தொழில் இரண்டாலும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியை வழிபடுதல்.

யோகம் :—அகத்தொழில் மாத்திரத்தால் சிவபெருமானுடைய அருவத் திருமேனியை வழிபடுதல்.

ஞானம் :—அறிவு மாத்திரத்தினால் உருவம், அருவுருவம், அருவம் என்னும் மூவிதத் திருமேனிகளையுங் கடந்து நிற்கும் அகண்டாகார ஜோதி மயமான சிவபெருமானை நோக்கிச் செய்யும் வழிபாடாகும். இம்மார்க்கங்கள் நான்கும்,

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்பு மலர்காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்றபடி மோக்ஷ சாதனமாய் நிற்கும். சரியை இல்லாமல் கிரியையும், கிரியை இல்லாமல் யோகமும், யோகமில்லாமல் ஞானமும், ஞானமில்லாமல் இறைவனுடைய திருவடிப் பேறாகிய மோக்ஷமும் கைகூடா.

சரியை கிரியைகளைப் பயனற்றனவாக இகழ்ந்து ஞானத்தினாலேயே முத்தியடைய விரும்புவோர், படிவழி ஏறிச் செல்லாது, கீழ்நின்று மலையினுச்சிக்குப் பாயவிரும்புவோரை ஒத்தவராவர். ஆதலால், பேரானந்தப் பிறவா

வீடடைய விரும்பினோர், புறத்தும் அகத்தும் சிவபெருமானை வழிபடல் இன்றியமையாததாகும். சிவபெருமான் புறத்தே சிவாலயங்களிலுள்ள சிவலிங்க முதலிய வடிவங்களையும், சிவஞானிகளுடைய சரீரங்களையும் ஆதாரமாகக்கொண்டும், அகத்தே உயிரிடம் பிரேரகனாய் இருந்துகொண்டும், மக்களாற் செய்யப்படும் வழிபாட்டை ஏற்றருளுகின்றார். அகத்தே செய்யும் வழிபாட்டிற்குக் கண் முதலிய பொறிகளும், கை முதலிய அங்கங்களும் தொழிற்பட மாட்டா இவை சிவத்தொண்டிலே சென்றால் மாத்திரம் தீயவழியிற் செல்லாது நிற்கும்; இன்றேல், தம்மிஷ்டப்படி சஞ்சரிக்கும். நமக்குள்ள எந்தக் கருவியையும் தீயவழியிலிருந்து நேரே அடக்குவதரிதாதலால், அதற்கு நல்வழியைக் காட்ட வேண்டும் என்பது பற்றித்தான்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றார் திருவள்ளுவரும்.

ஆதலால், புறக்கரணங்களை முதலில் செந்நெறிப் படுத்தாவிடின், அகப்பூஜை செய்வது இயலாததாகும். சிவஞானிகளுடைய திருமேனியைக் காண்பது மிகவுமரிது. அதை இப்பிறவியிலே, ஒரு முறையேனும் காணமுடியாது போகவும் கூடும். ஆதலால், கண் முதலிய பொறிகளும் அங்கங்களும் பயன்படுதற்குக் கோயில் வழிபாடே மக்கட்கு மிகப் பொருத்தமானதாகும். கோயில் அறிவிலிகள் முதல் சிவஞானிகள் ஈறாக உள்ள யாவர்க்கும் அவசியமாகும். சரியையாளர் முதலிய நால்வர்க்கும் சிவாலய வழிபாடு பயன்படும் என்பதை,

"திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் ஆங்கே
உருக்கோலி மந்திரத்தா லெனநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனிங்கு முளனென்ன் பார்க்கும்
விருப்பாய வடிவாகி யிந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தின் வந்துதித்து மிகுஞ்சுரபிக் கெங்கும்
உருக்காண வொண்ணாத பான்முலைப் பால்விம்மி
யொழுகுவது போல் வெளிப்பட்டருளுவன் அன்பர்க்கே."

என்று சிவஞான சித்தியார் வலியுறுத்துகின்றது. சிவபெருமான், ஆலயத்துள்ள சிவலிங்கத்திலே சரியையாளர்க்கு மறைந்து நின்றும், கிரியாவான்களுக்கும் யோகிகட்கும் பூஜிக்கும் போதுமாத்திரம் தோன்றியும், ஞான

வான்களுக்கு அன்பே தாமாய் எப்போதும் விளங்கித் தோன்றியும் அருள்புரிகின்றார் என்பதன்றோ இதன் கருத்து. இங்ஙன மிருக்க, தற்காலத்தில் நாத்திகம் படிந்த மனத்தினர் சிலர், பட்டினத்தடிகள், தாயுமானவர், சிவவாக்கியர் முதலிய மஹான்களுடைய வாக்கியங்களில்,

"சிற்றம் பலமும் சிவனு மருகிருக்க
வெற்றம் பலந்தேடி விட்டோமே"

"பண்ணேனு னக்கான பூசையொரு வடிவிலே"

"தீர்த்தலிங்கமூர்த்தி என்று தேடியோடுந் தீயரே"

என்பன போன்ற சில வாக்கியங்களைப் பொறுக்கிக் கொண்டு, சிவாலய சேவை, வழிபாடு முதலியவற்றை பயனற்றவை என இகழ்ந்து, தாங்கள் கெடுவது மன்றிப் பிறரையும் கெடுக்க முயல்கின்றனர். அந்தோ! என்னே! இவர்கள் அறியாமை! சிவஞானச் செல்வர்களாய அவர்கட்குச் சிவாலய வழிபாடு சம்மதமில்லையேல்,

"காலையு மாலையுங் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம் வருவதற்கே சால்பினின்
கைகொடு குயிற்றுவ தேய
நின்னது கோயிற் பல்பணி குறித்தே" என்றும்,

"பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப் பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே" என்றும்,

"தீர்த்தலிங்கமும்முளே தெளிந்துகாண வல்லிரேல்
தீர்த்தலிங்கந் தானதாய்த் தெளிந்ததே சிவாயமே"

என்றும் ஏன் கூறல் வேண்டும்? அவர்கள் சிவாலய வழிபாட்டை இழித்துக் கூறியது, சிவாலய வழிபாட்டின் தத்துவார்த்தத்தை உணராது செய்கின்ற கிரியைகள் சீக்கிரம் பயன் தராவாதலால், அவைகளின் உண்மைகளை மக்கள் அறியவேண்டும் என்பதை வற்புறுத்துவதே யாகும்.

நோய்களை நீக்கும் வைத்தியன் எவர்க்கும் இனிமை பயக்கும் தேன் பால் சர்க்கரை முதலிய பொருளினுள்ளே மருந்தைப் பொதிந்தூட்டுவது போலன்றோ மலப்பிணியகற்றும் பரமவைத்தியனாகிய சிவபெருமான், சிற்றறிவினர்களாகிய ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு எளிதில் ஞானமடைவதற்காகச் சைவ சித்தாந்த தத்துவ உண்மைகள் நிறைந்திருக்கும் சிவாலயங்களையும் வழிபாட்டையும் விதித்திருக்கின்றார். சிவாலயம் சிவலிங்கம் பூஜை முதலிவைகளின்

உண்மைகள் யாவும் சிவனருள் பெற்ற சிவஞானிகளே யல்லாமல் ஏனையோர் அறிய முடியாதனவாகும் என்பதை,

" குறிக ளும்அடை யாளமுங் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே "

என்னும் தேவாரம் உணர்த்துகின்றமையால், அவைகளின் உண்மைகளில் சிலவற்றை மாத்திரம் ஈண்டு எடுத்துக் காட்டுவாம்.

## ஆலயம்

நம் நாட்டிலுள்ள சிவாலயங்களும் அங்கு நடக்கும் ஆசாரங்களும், பிறமதத்தினர் தத்தம் மனப் போக்கின் படியே கட்டப்பட்ட கோயில்கள் போலவும், அங்கு நடக்கும் சடங்குகள் போலவும் அல்லாது, ஒவ்வொன்றும், முதல் நூல்கள் விதித்தபடியே இயற்றுதல் சித்தாந்த உண்மைகளை உணர்தற்கும் சாதித்தற்கும் ஏற்றனவாக விருக்கின்றன.

ஆலயங்கள் எல்லாவற்றினும், கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஸ்தூபி, பிராகாரம், கோபுரம் முதலியன ஒரே தன்மையாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆலயம் சரீர பிரஸ்தாரம் (சரீரத்தைக் குறிப்பது) இருதய பிரஸ்தாரம் (ஹிருதயத்தைக் குறிப்பது) என இருவகைப்படும். அவற்றுள் ஹிருதய பிரஸ்தாரம் சிதம்பரம் முதலிய க்ஷேத்திரங்களாகும்; சரீர பிரஸ்தாரம் மற்றைய ஆலயங்களாகும்.

ஆலயங்களிலுள்ள கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம் மூன்றும் ஆன்ம தத்துவம், வித்யா தத்துவம், சிவ தத்துவம் முதலியவைகளைக் குறிக்கின்றன.

கர்ப்பக்கிரஹம் என்பது, பிரதான மூர்த்தியாகிய சிவலிங்கத்தை வைத்து வணங்கப்படும் இடம். அதற்கு மூலஸ்தானம் என்னும் பெயரும் உண்டு. இதனுண்மை பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமான மூலப் பிரகிருதியின் இடம் என்பதாம். அதாவது, சிவபெருமான் உலகைச் சிருஷ்டிக்க இச்சித்த காலத்து அவரது அருட்சக்தியை மாயையினிடத்தே அதிட்டிக்கச் செய்கின்றார் என்பது. அது, அப்போது அரூபியாய், (நிஷ்களராய்) இருக்கும் சிவபெருமான் ரூபாரூபி (சகள நிஷ்களராய்) ஆகிறார் என்பதைக் குறிப்பிடுகின்றது.

கர்ப்பக் கிரஹத்துக்கு மேல் இருதய கமலாகாரமாக விளங்கும் தூபியானது, இருதயமே ஆன்மாவிற் கிருப்பிடமென்பதையும், ஆன்மாவிற்குப் பிரேரகனாய் இருப்பவரும், இருதயத்திலிருக்கும் சிதாகாசத்தில் விளங்குபவரும், சிவபெருமானே என்பதையும் உணர்த்துகின்றது.

அர்த்தமண்டபம், மஹாமண்டபம், ஸ்நபந மண்டபம், அலங்கார மண்டபம், சபாமண்டபம் என்னும் மண்டபங்கள் நிவிருத்தி, பிரதிஷ்டை, வித்தியை, சாந்தி, சாந்தியாதீதம் என்னும் கலைகளை உணர்த்துகின்றன.

சிவபெருமானைச் சூழ்ந்திருக்கும் ஐந்து பிராகாரங்கள், அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என்னும் ஐந்துவித கோசங்களையும் குறிக்கின்றன. மூன்று பிராகாரங்கள் ஐந்து கோசங்களினால் ஆன ஸ்தூல ஸூக்ஷ்ம காரணம் என்னும் மூவகைச் சரீரங்களை விளக்குகின்றன.

ஆலயங்களில் அமைக்கப்பட்டிருக்கும் கோபுரங்களைப் பிரம்ஹரந்திர மத்யகபாலத்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர்.

மூலஸ்தான மூர்த்திக்கு நேராக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் துவஜஸ்தம்பம், யோகியானவன் பிராணவாயுவை நடு நாடியாகிய ஸுஷும்நையில் அசைவற்று நிறுத்திக்கொண்டு தியானிக்கில், மனம் முதலிய கரணங்கள் யாவும் நின்று பிரபஞ்சமே தோன்றாது சிவதரிசனம் உண்டாகும் என்னும் உண்மையை அறிவிக்கின்றது.

"தறிபோ லுடல நேரிருந்து தயங்கு மருங்கி னிருநாடி
நெறிபோய் மீளும் வலியதனை நிறுவிநடு நாடியிற் செலுத்தி
யறிவோர் சிறிதுஞ் சலியாம லன்னப் பெயர்மந்திர மாறிக்
குறிபோ யிருந்த வொருகுறியைக் குறித்துக் கொண்டங்
[கிருந்தனரால்"

"வாயு நிற்ப மனநின்று மனந்தா னிற்பப் பொறிநின்று
பாய பொறிக ணிற்ப விடர்படு புன்புலன்க ணின்றனவா
மாய புலன்க ணின்றமையா லகிலந் தோன்றா துள்ளத்தே
தூய பரமா னந்தபாஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார்"
—சிவப்பிரகாசர் பிரபுலிங்க லீலை

ஆலயங்களில் சிவலிங்க மூர்த்தியைத் தெரியவொட்டாது மறைத்து நின்று நீக்கியவழி, சிவபெருமானைக் காட்டிநிற்கும் கதவுகள், ராகம், துவேஷம், லோபம், மோஹம்,

மதம், மாற்சரியம் என்பவைகட்குக் காரணமாகிய அவித்தையை உணர்த்துகின்றன.

## சிவலிங்கம்

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய வரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே"

என்று திருமூலர் கூறியபடி, சிவலிங்கம் சிவாநந்தத்தைக் கொடுக்கும் சிவத்தையும், எதிரே இருக்கும் நந்தி முக்தியடைந்த ஆன்மாவையும், பலிபீடம் மலத்தை நீக்கும் சிவசக்தியையும் குறிக்கும். பலிபீடம் பத்திரலிங்கம் (மங்களத்தை உண்டாக்கும் லிங்கம்) எனப்படும்.

"தூலலிங்க மாந்தூபி சூக்குமமாம் உள்ளிலிங்க
மேலும் பலிபத்திரம்" —சைவசமய நெறி

மேலும், சிவஸாதாக்கியம், அமூர்த்தி ஸாதாக்கியம், மூர்த்தி ஸாதாக்கியம், கர்த்துரு ஸாதாக்கியம், கர்மஸாதாக்கியம் என்பவைகளில் சிவலிங்கமானது கர்மஸாதாக்கியம் என்று சொல்லப்படுகின்றது. ஸாதாக்கியம் என்பது பிருதுவி தத்துவத்திலிருந்து 34-வதும், சிவதத்துவத்திலிருந்து 3-வதுமான தத்துவமாகும்.

சிவபெருமான் ஆன்மாக்களுடைய தியானபாவனையின் நிமித்தமாக நிட்கள சகள (அருவுருவ) திருவுருவங்கொண்ட நிலையே ஆவுடையாளுடன் கூடிய இலிங்கமாம்.

"நிட்களன்ரு னன்பால் நினைந்தருச் சிக்கச்சகள
நிட்கள ஞானி மலனே" —சைவசமய நெறி

ஞான சக்தியாகிய சிவலிங்கத்தில் காணப்படும் ஆவுடையாள் கிரியா சக்தியைக் குறிக்கும். இலிங்கத்தில் பிரமபாகம், விஷ்ணுபாகம், ருத்திரபாகம் என மூன்று பாகங்கள் உள. அவற்றுள் பிரமபாகம் நபும்சக லிங்கமும், விஷ்ணுபாகம் ஸ்திரீலிங்கமும், ருத்திரபாகம் பும்லிங்கமுமாக (அலி, பெண், ஆண் ரூபமாக) இருப்பது, அவன், அவள், அதுவாக இருக்கும் உலகத்திலே உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் தம்மிடத்தே தோன்றி யொடுங்குகின்றன வென்பதை இவை உணர்த்துகின்றன.

அகரம் கண்டமும், உகரம் கோமுகமும், மகரம் வட்டமும், பிரணவம் இலிங்கமுமாயிருப்பன. இது சிவ

பெருமானே பிரணவ முதற்பொருள் என்பதையும், எல்லாச் சுருதிகளும் பிரணவத்திடமிருந்து தோன்றி யொடுங்குவது போலவே எல்லாத் தேவர்கட்கும் பிறப்பிடமாய்,

" சமயகோடிக ளெல்லாந் தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட "

நிற்பவரும், சிவபெருமானே என்பதையும் உணர்த்துகின்றது.

சிவலிங்கத்தின் தத்துவார்த்தங்களை விரித்து எழுதப்புகின் தனிப்புத்தகமாகிவிடும். ஆதலால் இத்துடன் விடுத்தனம்.

சிவலிங்கத்திற்கு நேராக வைக்கப்பட்டிருக்கும் நந்தி பலிபீடம் இரண்டும்,

" பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போல் பசுபாச மநாதி "

என்று கூறியபடி பதியாகிய சிவம் எப்போழ்துண்டோ அப்போழ்தே பசுபாசங்களும் உள. இம்மூன்றும் அநாதி நித்யம் என்பது சித்தாந்த உண்மை. இன்னும் ஆலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூர்த்தியும் சைவ சித்தாந்த தத்துவ உண்மைகளை விளக்கவே ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை விரிவஞ்சி விடுத்தனம்.

## பூஜை

இனி, பூஜைகளைப்பற்றிக் கவனிப்போம். பூஜை என்பதற்கு ஞானத்தை உண்டாக்கக்கூடிய சாதனம் என்று பொருள்.

அத்தகைய பூஜை, ஆன்மார்த்தம் (தான் மாத்திரம் உய்வதற்காகச் செய்வது) பரார்த்தம் (பிறர் உய்வதற்காகச் செய்வது) என இருவகைப்படும். ஆன்மார்த்தமாவது சிவதீக்ஷை செய்யுங்காலத்தில் ஆசாரியனால் கொடுக்கப்பட்ட இலிங்க முதலியவைகளைப் பூஜித்தல். பரார்த்தமாவது உலகினர் வழிபட்டுய்வதற்காகத் தேவர்கள் இருஷிகள் அரசர் முதலியவர்களால் தாபிக்கப்பட்ட ஆலயங்களில் பூஜிப்பது. ஆன்மார்த்தத்திற்கும், பரார்த்தத்திற்கும் பூஜை முறைகளில் அதிக வித்யாசம் இல்லையேனும், பரார்த்த பூஜையில் ஆவரண பூஜை, உபசாரங்கள், தீபாராதனை, உற்சவம், பிராயச்சித்தம் முதலிவைகள் அதிகமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஈண்டு பூஜையைப் பற்றி மாத்திரம் கவனிப்போம்.

ஆகமங்களின் பேதத்தினால் சில ஆலயங்களில் சிற்சில ஆசார அநுஷ்டானங்கள் மாறுபட்ட போதிலும், பிரதான

மான பஞ்சசுத்தி, பூஜை, நைவேத்யம், தீபாராதனை முதலியன ஒன்று போலவே காணப்படும்.

பஞ்ச சுத்தியாவது, ஆன்மசுத்தி, ஸ்தானசுத்தி, திரவிய சுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்பனவாம். பஞ்ச சுத்தி செய்த பிறகுதான் சிவபெருமானைப் பூஜிக்க வேண்டும் என்பது ஆகமங்களின் கட்டளை.

முதலாவதான ஆன்ம சுத்தியானது பூதசுத்தி, அந்தரி யாகம், சமாதி என்பனவற்றின் தொகுதியாகும். பூதசுத்தி என்பது சரீரங்கட்குக் காரணமான ஐவகைப் பூதங்களை யும் சுத்தி செய்தலாகும். இதில், சூட்சும சரீரசுத்தி, தூல சரீரசுத்தி என இரண்டு பகுதிகள் உண்டு. சரீரத் தைச் சுத்தி செய்வதற்காக அதனோடு சம்பந்தப்பட்டுள்ள ஆன்மாவைப் பிராணாயாமத்தினால், த்வாத சாந்தத்தில் இருக்கும் சிவபெருமானிடத்தில் சேர்ப்பித்து, தத்துவங்களை மகாமாயையிலும், புரியஷ்டகங்களை - சூக்கும சரீரங்களை (சப்தபரிசரூபரசகந்த மனசு புத்தி அகங்காரம்) பிரமாமுதல் சிவமீறாகவுள்ள மூர்த்திகளிலும் ஒடுங்கினதாகப் பாவித்தல் சூட்சும தேக சுத்தியாகும். நிவிருத்தி முதலியவைகளின் பீஜாக்ஷரங்களை உச்சரித்து அவைகளின் வலிகெடச்செய்து, தன் சரீரத்தை ஊர்த்துவ மூலமான (மேலே வேரும், கீழே கிளைகளுமுள்ள) ஆலமரமாகப் பாவித்து, அதனைத் தனது வலக்கால் பெருவிரலிலிருந்து உண்டான அக்கினியினால் தகித்து, திருவருட் சத்தியாகிய அமிர்தத்தினால் நனைத்துச் சுத்தமானதாகப் பாவித்தல் தூலதேக சுத்தியாகும். இத னுண்மை பிருதிவி முதலிய தத்துவங்கள் ஜடங்களான படியால் அவைகள் தாமாகக் காரியப்படமாட்டா வெனக் கண்டு அவைகளினின்றும் நீங்கும் பாவனையாம்.

"பாங்குபடத் தத்துவங்கள் நீங்கப்பூத சுத்தி" —சிவப்பிரகாசம்

அந்தரியாகம் :—வெளியே செய்யும் முறை போலவே இருதய கமலத்தில் சிவபெருமானைப் பூஜித்துப் பூஜையின் பலனை அவரிடத்தே ஒப்புவித்தலாகும்.

சமாதி :—அகண்டாகாரமான சிவபெருமானை விந்து தானத்தில் தீப ஜ்வாலை போன்றவராய்த் தியானித்துப் புறப் பூஜைக்கு அநுமதி பெறுதல்.

"காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக

நேயமே நெய்யும்பாலாய் நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே"
—அப்பர் தேவாரம்

"நாபியழ றனிலோமஞ் செய்த தற்பின்
புருவநடு வதனி னன்காத்
தீபசிகை போலுறையுஞ் சிவன் றன்னை
நினைந்தகத்துட் பூசை தன்னை
மாபவந் தீர்ந்திட முடித்தபின் னிலிங்கத்
தனிற்றழலில் வயங்கு மண்ணில்
தூப முதலிய வேந்திச் சிவபூஜைதனை
யியற்றத்தொடுக்க வேண்டும்" —வாயு சங்கிதை

ஸ்தானசுத்தி :—அசுரர்கள் உட்பிரவேசியாதிருப்பதற்காக அஸ்திர மந்திரத்தினால் திக்பந்தநம் செய்வதால் பூஜை செய்யுமிடத்தைச் சுற்றி நாற்புறமும் அக்னி வடிவாகிய மதிலும், கவச மந்திரத்தை உச்சரித்து அவகுண்டனம் செய்வதால் மூன்றகழும், சக்தி மந்திரத்தைச் சொல்லி தேநு முத்திரை காட்டுவதால் திருவருட் சத்தியாகிய வலை மேலும் கீழும் உண்டானதாகப் பாவித்தல். இதனுண்மை, பூஜாஸ்தானத்தைச் சிவனுறைகின்ற சிவதத்துவமாக்குதல்.
"பகர்சிவ தத்துவ மாக்கற் றலசுத்தி"—தத்துவப் பிரகாசம்

திரவியசுத்தி:—புஷ்பம் முதலிய பூஜா திரவியங்களை நிரீக்ஷணம்(பார்த்தல்)முதலியஸம்ஸ்காரங்களினால் சுத்திசெய்தல்.

இதன் தத்துவமாவது திரவியங்கள் யாவும் மாயையினிடத்திருந்து தோன்றி மாயாசம்பந்தம் பெற்றிருப்பதால் சுத்தனாகிய சிவபெருமானுக்கு அவை உரியனவாகாவாதலால், (சிவமந்திரத்தைச் சொல்லிக்கொண்டு பார்த்தல் முதலிய) நிரீக்ஷணாதிகளினால் சிவசக்தியை அதிற் பதியும்படி செய்யின் அவை சுத்தமாகி, சிவபெருமானுக்குகந்தனவாகும். அதாவது, பூஜாத்திரவியங்களும் சிவபெருமானுடைய எண்வகைச் சரீரங்களுள் அடங்கினவை என்றறிவதாம்.

"நாவிரண்டு திருவுருவ நோக்கி நோக்கால்
நலங்கொள் திரவிய சுத்திநயந்து"—ஞானபூஜைத் திருவிருத்தம்

"பூவாகிப் பூவுக்கோர் நாற்ற மாகிப்
புக்குளால் வாசமாய் நின்றா னாகி" —அப்பர் தேவாரம்

மந்திரசுத்தி :—தன்னுடைய ஆஸனத்திலே சிவாஸனத்தையும், தன் இருதயத்திலே சிவமூர்த்தியையும் பூஜித்துத்

தன்னைச் சிவரூபமாகப் பாவித்துக்கொண்டு மந்திரங்களை ஹ்ரஸ்வ தீர்க்க ப்லுதக் கிரமமாக உச்சரித்தலாகும். இதனுண்மை யாதெனின், பஞ்சாக்ஷரத்தைச் சாதாரண ஐந்தெழுத்தாகக் கொள்ளாமல் சிவ்விலே சிவமும், வவ்விலே திருவருட் சக்தியும், யவ்விலே ஆன்மாவும், நவ்விலே திரோதான சக்தியும், மவ்விலே மலமும் ஆகிய ஐந்து முதலையுடையதாகக் காண்பதாகும்.

இலிங்கசுத்தி :—சிவலிங்கத்தின் பேரில் இருந்த நிருமாலியங்களைக் களைந்து இலிங்கத்தையும் பீடத்தையும் அர்க்கிய ஜலத்தினலபிஷேகித்தல். சித்பிரபஞ்சம், அசித்பிரபஞ்சம் என்னும் இரண்டிலும் பிரிவறச் சேஷ்டித்து நிற்கும் சிவபெருமான் இலிங்கத்திடத்தேயும் இருக்கின்றார் என்றுணர்தலே இலிங்க சுத்தியின் உண்மையாகும்.

"நாதன்மே லுகந்த மலரொதுக்கி யுருவநோக்கி
விமல னிறையுணர்ந் தெவையு மேனியான
சீலமு மங்கருவு திருவுருவு மான சிறப்புமுணர்ந்
திலிங்கசுத்தி சேர்த்தி டாயே" —ஞானபூஜைத் திருவிருத்தம்

இத்தகைய ஐந்துவித சுத்திகளையுஞ் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்னும் ஐவகைப் பாசங்களைக் களைதல் என்னும் கருத்துப்பற்றியே யாம் என்பதை,

"பஞ்சவித சுத்தியினைப் பண்ணிடுக பாங்காகப்
பஞ்சவிதப் பாச மறப்பார்"

என்னும் சைவ சமயநெறிச் செய்யுளாலறிக.

இதற்குப் பிறகு செய்யப்படுவது அபிஷேகம். அஃதாவது வடித்தெடுத்த நீரில் புஷ்பங்களையும் வாசனைத் திரவியங்களையும் சேர்த்து, சிவபெருமானை அபிஷேகித்தலாகும். இதனுண்மை "அருளெனும் புற விணையாட்டி" என்று காசி காண்டத்திற் கூறியபடி திருவருள் ஞானமே நீரெனப் பாவித்து அபிஷேகஞ் செய்யின், மல நிவாரணம் ஏற்படும் என்பதாம்.

"தம்மிற் சிவலிங்கங் கண்டதனைத் தாம்வணங்கித்
தம்மன்பால் மஞ்சன நீர்தா மாட்டி"

என்றபடி மருட்போதமே மலமாதலால் அம்மல வசுத்தத்தை அன்பெனும் அருள் நீர்கொண்டு சுத்திசெய்தலென்னும்பாவனையாம்.

வஸ்திரம் :—சிவபெருமானுக்கு மெல்லிய இழைகளை யுடையதும் நுரைபோல் வெண்மையுடையதுமான பட்டு வஸ்திரஞ் சாத்துவது, திரோதானசக்தி நீங்குதலென்னும் பாவனையாகும்.

ஆசன பூஜை :—(சிவபெருமானுக்கு ஆசனமிடுதல்) அதாவது, ஆதார சக்தி முதற் குடிலசக்தியந்தமாகவுள்ள தும், முப்பத்தாறு தத்துவங்களையும் இருநூற்றிருபத்து நான்கு புவனங்களையு முறுப்புகளாக வுடையதும், அநந்தா சனம், ஸிம்ஹாஸனம், யோகாசனம், பத்மாஸனம், விமலா ஸனம் என்னும் ஐந்து பிரிவினையுடையதுமான ஆசனங் களைச் சிவபெருமானுக்கு இட்டதாகப் பாவித்தல்.

“ ஆலவித் தென்னக்கோடி பொருளெலா மடங்கவைகு
மூலமாயுறைந்து மன்னி முக்குணங் கடந்தவெய்ய
காலனுருயி ரையுண்ட கனைகழற் கடவுள்மூர்த்தி
மேலதாங் குடிலைதன்னின் மேவிவீற் றிருக்குமன்றே ”

—வாயு சங்கிதை

இத்தகைய ஆஸனம் சிவபெருமானுக்கு இடுவது சிவபெருமான் தத்துவாதீதர் என்பதை உணர்தற்கேயாம். வித்தியாதேகம் (சிவபெருமானுக்கு பஞ்ச பிரஹ்ம ஷடங்க மந்திரங்களினுலாய சரீரம்) கற்பித்தல். இதனுண்மை நிஷ்கள (அரூபியாயிருக்கிற) சிவபெருமான் உலகைச் சிருஷ்டிக்க இச்சித்த காலத்தில் அவரிடத்தேயுள்ள சக்தி களே சிரம் முதலியனவாகின்றன. அதாவது எல்லாவற் றிற்கும் அப்பாலாய் எல்லாவற்றிற்கும் மேலாய் விளங்கும் ஈசான சத்தி தலையாகவும், ஆன்மாக்களுக்கு ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்து மலத்தை நீக்குதற்குரிய புருஷ சக்தி முகமாகவும், கோரமாகிய மலத்திற்கு விரோதியாயிருந்து அதனைச் சாந்தப்படுத்துதற்குரிய அகோர சக்தி இருதய மாகவும், ஆன்மாக்களது கன்மத்துக்கேற்ப தநுகரண புவன போகங்களை அளித்துத் தரும முதலியவைகளை அநுபவிக்கச் செய்தற்குரிய வாமதேவ சக்தி (கொப்பூழ்) குஹ்யமாகவும், இச்சாமாத்திரத்தினல் தநுகரண புவனங்க ளென்னும் சாதன மின்றி, சகல பிரளயாகலர்க்குச் சரீரங் களையும், விஞ்ஞானகலர்க்கு வைந்தவ சரீரத்தையு முண்டு பண்ணக்கூடிய ஸத்யோஜாத சக்தியானது பாதமாகவும், முக்தாத்மாக்களுக்கு உணர்த்தப்படும் திருவருட் சக்தியே இருதயமாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக விருத்தலாகிய

ஈசசக்தியே சிரஸாகவும், எல்லா ஆன்மாக்களையும் வசப்படுத்தும் அநாதிஸித்தமான வசித்வமே சிகையாகவும், ஆன்மாக்களை எக்காலத்தும் இரக்ஷிக்கும் சக்தியே கவசமாகவும், ஸர்வஞ்ஞத்துவமே நேத்திரங்களாவும், யாவராலும் ஆற்ற முடியாத பராக்கிரமமே அஸ்திரமாகவும் இருந்து பிரபஞ்ச காரியங்களை நடத்துகின்றன வென்பதாம். இதன் உண்மையைப் பௌட்கரம் - மிருகேந்திரம் பதி படலத்தில் காணலாம்.

பூஜையில் பதினறுவித உபசாரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன :—ஆவாகனம், தாபனம், ஸந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம், தேனு முத்திரை, பாத்தியம், ஆசமநீயம், அருக்கியம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பாநீயம், செப சமர்ப்பணை, ஆராத்திரிகம் (தீபாராதனை) என்பனவாம்.

ஆவாகனம் :—பூஜையின் பொருட்டுச் சிவபெருமானைச் சிவலிங்க வடிவத்தில் மூலமந்திரத்தைச் சொல்லி வரவழைத்து அபிமுகமாகச் செய்தல் ஆவாகனமாகும். இதனுண்மை சிவபெருமானுடைய பரிபூரணத்தைச் சிவப்பிரசாதமாகிய அருளினலறிந்து அதிலழுந்துதலென்னும் பாவனையாம்.

"இப்படித் தரைமுதற் சமனை யீருய்ச்
செப்ப வியாபிக்கும் பரம சிவனது
பொருவி லுயர்பரி பூரணந் தன்னை
யறிவி லழுந்து தலாவா கனமே" —சதாசிவரூபம்

தாபனம்:—தயாநிதியே! அடியேனை அநுக்கிரஹிப்பதற்காக இலிங்கத்தில் எழுந்தருளி இருக்கவேண்டுமென்று அன்புடன் யாசிப்பது தாபனம். ஆன்மா சிவபெருமானை அருளினலறிந்து அதிலழுந்துதலை நிலைபெறச் செய்தலே இதன் கருத்தாகும்.

"அலையா தழுந்த நிலைபெறல் தாபநம்."

ஸந்நிதானம் :—பூஜிக்கப்படுபவனுகிய கடவுள், அநுக்கிரஹிக்கும் தன்மையையும் பூஜிக்கின்றவனுகிய தான் அநுக்கிரஹிக்கப்படும் தன்மையையும் உண்டுபண்ணுவதே ஸந்நிதானமாகும் (ஸந்நிதானம் - ஸமீபித்த சம்பந்தம்.)

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்

தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே.'' என்றும்
இவன்றன தறிவு சிவன் பூரணதநிலும்
சிவபூ ரணத்துவ மிவன்றன தறிவிலும்
ஒன்றை யொன்றகலா துறவுசெய் திருப்ப
தொன்றிய சந்நி தானமென் றுரைப்பர்.''

என்றும் கூறியபடி, கடவுள் ஆண்டவன், நாம் அடிமை என்னும் உணர்வு மனதில் பதிவதே இதனுண்மையாகும்.

ஸந்நிரோதனம் :—'பகவானே! எப்போதும் என்னிடத்தில் அநுக்கிரஹத்தோடு இருக்கவேண்டும்' என்று பிரார்த்திப்பதே ஸந்நிரோதனமாகும். முற்கூறிய ஆண்டான் அடிமை என்னும் உணர்வு எக்காலத்திலும் மனதை விட்டகலாமல் சமைவதே இதன் பொருளாம்.

"இவனிடத் துறுமறி வென்று மொழியாச்
சமைவது தானே ஸந்நிரோ தனமாம்."

அவகுண்டனம்:—சிவலிங்கத்தைச் சுற்றிக் கவச மந்திரத்தினல் மூன்றகழ் உண்டானதாகப் பாவித்தல். இதன் கருத்து தரிசிக்கும் பக்தர்கட்குச் சிவத்தை அறிவிப்பதேயாகும்.

தேனுமுத்திரை:—சிவபெருமானுக்கு முன்பாகப் பசுவின் மடிபோன்றதோர் முத்திரை காட்டுதலே தேனுமுத்திரையாகும். இலிங்கத்தையும் சிவபெருமானையும் அபின்னமாகப் பாவித்தலே இதனுண்மையாகும்.

பாத்தியம் :—மூலமந்திரத்தை 'நம:' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்து ஜலத்தைத் திருவடிகளில் சமர்ப்பித்தல்.

ஆசமநீயம் :—மூலமந்திரத்தை 'ஸ்வதா' என்னும் இறுதியை உடையதாக உச்சரித்துச் சிவபெருமானுடைய ஐந்து முகங்களிலும் மும்மூன்றுதரம் ஜலத்தைச் சமர்ப்பித்தல்.

அர்க்கியம் :—ஸ்வாஹாந்தமாக மூலமந்திரத்தையுச் சரித்துச் சிவபெருமானுடைய ஈசானம் முதலிய சிரசுகளில் ஜலத்தைச் சமர்ப்பித்தல். இவைகளினுண்மையாவது ஆன்மாவானது தநுகரணபுவன போகங்களாகிய குற்றங்களினின்றும் நீங்கிப் பரிசுத்தமாகிச் சிவபெருமானுடைய பிரகாசமாகிய இச்சாஞானக் கிரியைகள் பொருந்திய ஸ்தானமாகிய திருவடியை அடைந்து சக்திகளுடைய விளக்கத்திலே திருவருள் என்னும் தன்மை பொருந்திய திரு

மூகத்திற் பொருந்தி அருள் விளக்கத்திலே நிஷ்களமாகிய திருமுடியடைதலென்னும் பாவனையாம்.

"பாத்தியா சமனார்க்கியம் பழுதக
லான்ம சுத்தி நிமித்த மாகவும்."

புஷ்பதானம் :—சிவமந்திரத்தை வௌஷடந்தமாக உச்சரித்துப் புஷ்பங்களைச் சாத்துதலாகும். இதனுண்மை சுத்த சைதந்யமாகிய மோக்ஷத்தைப் பெறுதலாகும்.

"நறுமலர் தனை நல்வீட் டின்பம்
குறுகுத லேது வாகவும் கொடுத்து" —சதாசிவ ரூபம்

தத்துவத்திரய பூஜை :—ஆன்மதத்துவம் வித்யாதத்துவம் சிவதத்துவம் இம்மூன்றிற்கும் சிவபெருமானே அதிபதி என்று அருச்சித்தல். இதனுண்மை ஆன்மபோதம் நீங்கிச் சிவபோதம் பதியுங் காலத்து, மனம் வாக்கு காயத்தால் வந்தவினைகளும், சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்தம் என்னும் வினைகளும் நீங்குதல் என்னும் பாவனையாம்.

"நீங்கருங் கரும சுத்தி நிமித்தம்
நீங்கறுந் தத்துவத் திரயஞ் சாத்தி."

இதற்குப் பிறகு இலயாங்கம். பஞ்சபிரம்ஹ ஷடங்க மந்திரங்களை அவ்வவ் அவயவங்களில் பூஜித்தல்.

போகாங்கம் :— பஞ்ச பிரஹ்ம ஷடங்க மந்திரங்களை எட்டு மூலைகளிலும் பூஜித்தல், இதனுண்மை, சிவயோகத்திற்குரிய சர்வஞ்ஞத்துவம், நித்திய பரிபூரணம், அநாதிபோதம், சுதந்திரம், அலுப்தசக்தி, அனந்தசக்தி என்னும் ஆறுகுணங்களையும் ஆன்மா பெறுதலென்னும் பாவனையாம்.

தூபம் :—கிரியாசக்தி ரூபமாகிய தூபத்தைச் சிவசந்நிதானத்திலிடுதலின் உண்மையாவது, ஆணவமலமாகிய அறியாமையைக் கிரியா சக்தியைக்கொண்டு சிவபெருமான் நீக்குதலெனும் குறிப்பேயாகும்.

தீபம் :—சிவபெருமானுக்குத் தீபம் சமர்ப்பித்தலின் கருத்து : சிற்சக்தியாகிய தீபம் ஆன்மாவினது மலத்தைப் போக்கி ஞானத்தை விளக்குதலென்பதாம்.

"ஞான விளக்கம் நண்ணுதற் பொருட்டு
தூப தீபந் துதைந்தினி தளித்து."

நைவேத்தியம் :—ஆன்மகுணமாகிய அகங்காரம், சங்கற்பம், குரோதம், மோஹம் என்பவைகளையே அமுதாகச் சமர்ப்பித்தலென்னும் பாவனையாகும். பிரமாணம்,

"பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீ
ராட்டிச் சொன்மல ரணிந்துதற் போதவின் னமுதை
யூட்டித் தற்பர ஞானமா மோம வெங்கனலை
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சியு ரானார்"
—திருவிளையாடற்புராணம்

பாநீயம்:—வாசனை பொருந்திய தீர்த்தத்தைச் சிவபெருமானுடைய திருப்திக்காகச் சமர்ப்பிப்பது.

ஜெபசமர்ப்பணம் :—சிவ மூலமந்திரத்தை நூற்றெட்டு உருஜெபித்து அதை சிவத்தினிடத்திலேயே ஒப்புவித்தல். இதன் உண்மையாவது:—ஆன்மா சர்வகுணங்களும் கழன்று மோக்ஷமடைதலென்பதே யாகும்.

"எல்லா நன்மையு மெய்துதற் பொருட்டு
நல்ல ஜெபத்தை நயந்து நிவேதிதது."

ஆராத்திரிகம் :—அதாவது தீபாராதனை. இஃது எல்லாக் கோயில்களிலும் பெரும்பாலும் சாயங்காலத்திலே நடைபெறும். அதாவது, பலவகையான தீபங்களைச் சிவ பெருமான் முன்பாகக் காட்டுதல்; ஒவ்வொரு தீபத்துக்கும் ஒவ்வொரு கருத்துண்டு. இவற்றுள் முக்கியமானவை ஐந்து தட்டுகளும் குடமும். இவற்றின் கருத்தாவது : ஐந்து தட்டுகள் ஈசான முதலியவைகளையும், குடம் சாதாக்கிய தத்துவத்தையும் குறிக்கின்றமையால், ஈசானம் முதலியன ஸாதாக்கியத்தில் ஒடுங்குகின்றன, அச்சாதாக்கியமும் சிவத்திடத்தே ஒடுங்குகின்றதென்பதாகும்.

கடைசியாகக் காட்டப்படுவது கர்ப்பூரம். இதன் கருத்தாவது : கர்ப்பூரம் வெண்மை நிறத்தைப் பொருந்தி, அக்நி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றுங்கரையப் பெற்று ஆகாயத்துடன் கலந்து விடுவதுபோல், ஆன்மாவானது சத்துவகுணத்தை அடைந்து ஞானமாகிய அக்நியுடன் சம்பந்தம் பெற்று மூவகைச் சரீரங்களும் எல்லாப்பற்றுக்களும் நீங்கப்பெற்று, பரமுக்தியடைதல் என்னும் பாவனையாம.

"அக்கினி கர்ப்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே மருவி இருந்தாண்டி."—பட்டினத்தடிகள்

"தீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
ஜோதியுட னொன்றித் துரிசறுப்ப தெந்நாளோ."
—தாயுமானசுவாமிகள்.

பிறகு சிவபெருமானுக்கு அஷ்டபுஷ்பம் சாத்தல்: கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பவைகளே சிவபெருமானுக்குகந்த மலர்கள் என்னும் பாவனையாம்.

பிரதக்ஷிணம் செய்தல் :—பிரதக்ஷிணம் என்னும் சொல் லுக்குக் கோப முதலியனவற்றின் நீக்கம், மோக்ஷசித்தி, மலநிவாரணம், திருவருட்செல்வப் பேறு என்பவைகள் பொருளானபடியால், ஆன்மா அருள் வாயிலாக யாண்டும் சிவபெருமானோடு வியாபித்தல் என்னும் பாவனையாகும்.

பூஜையின் முடிவில் சிவபெருமான் முன்னிலையில் செய்யப்படும் நமஸ்காரம்: ஆன்மா பிரம விஷ்ணுக்களது தொழிலையும், அவர்களை அதிஷ்டித்துநிற்கும் ஞானக்கிரியைகளையும் விட்டுநீங்கி, சிவத்திடத்தே சேரும் பாவனையாகும்.

"அயன்மா லிருவர் கீழாகையின் பொருட்டுச்
சயமான் புறவெதிர் தண்டம் பண்ணி" —சதாசிவ ரூபம்

இவ்விதமாக ஆலயங்களில் நடத்தப்படும் தரிசனம் யாகம், உற்சவம் முதலான ஒவ்வொன்றும் சமய உண்மைகளை உட்கொண்டே விளங்குகின்றன. ஆதலாற்றான் சைவ சமயத்திற்கு முக்கிய பிரமாணமான சிவஞானபோதமும்,

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்று ஆலய வழிபாட்டை முடிவான அபிப்பிராயமாகக் கூறியிருக்கின்றது.

மேலும், ஆலயங்கள் இத்துணை விசேஷமுடையனவாயிருப்பதாலன்றோ நமது சமயாசாரியர்கள் யாவரும் ஆலய வழிபாட்டைமேற்கொண்டனர். இவற்றால் சிவாலயங்களுடையவும், சிவபூஜைகளுடையவும் உண்மைகளை உணர்ந்தும், பிறருக்கு உணர்வித்தும் சிவாலயங்கட்குச் சென்று சிவத்தொண்டு புரிவதுமே நாம் எடுத்த ஜென்மத்தின் பயனாகும். அதுபற்றியன்றே திருநாவுக்கரசு சுவாமிகள், "ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம்வந்து, பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்வாக்கை யாற்பயனென்" என்றும், ஔவைப்பிராட்டியார், "ஆலயந் தொழுவது சாலவுநன்று" என்றும் கூறியிருக்கின்றனர்.

## தாயுமானூர் திருநாள்

தமிழ்ப் புத்தாண்டின் முதல்தேதி (14-4-55) வியாழக்கிழமை, தாயுமானூர் திருநாள், கனம் எம். பக்தவச்சலம் (விவசாய மந்திரி) அவர்கள் தலைமையில் சிந்தாதிரிப்பேட்டை, பம்பிங் ஸ்டேஷன் ரோட், யோகாஸன ஆலயத்தில் நடந்தது. அவ்வமயம் 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் தாயுமானூர் பாடல்களில் 25-ம், 50-ம் வயதுவந்த ஆண்களும் பெண்களும் 100ம், 200ம், 300ம் ஆக மனனம் செய்து பரிசுப் போட்டியில் கலந்துகொண்டனர். அவ்வாறு போட்டியில் கலந்துகொண்ட 30 நபர்களில் திரு. C. ராமசாமி அவர்கள் தாயுமானூர் பாடல்கள் முழுமையும் (1450 பாக்கள்) மனனம் செய்து ஒரு சவரன் பரிசு பெற்றூர். பிறகு, திரு. A. M. பரமசிவானந்தம், M. A., M. Litt., (தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை) அவர்கள் "தாயுமானூரும் தவநெறியும்" என்னும் பொருள் பற்றியும், திரு. N. சங்கரன், M. A., L. T. (உதவிக் கமிஷனர், நகராண்மைக் கழகம், சென்னை) அவர்கள் "தாயுமானூரும் ஒழுக்க நெறியும்" என்னும் பொருள் பற்றியும் பேசினூர்கள். திரு. N. குருலிங்கம் (யோகாஸன ஆலயப் பிரசாரகர்) அவர்கள் வந்தனோபசாரத்திற்குப் பின் பிரார்த்தனையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

## பெரியபுராணம் மூலம்

சமாஜ மூன்றும் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ 1—2—0.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும்பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர்பைண்டு விலை அணு பன்னிரண்டு.

# தேவாரம் அடங்கன்முறை

## மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பு

ஏழு திருமுறைகள், 8250 பாடல்கள், 1488 பக்கம்; இதில் 160 பக்கங்களில் 150 தலைப்புக்களில், பல உட்பிரிவுகளில், பற்பல ஆராய்ச்சி நுட்பக் குறிப்புக்கள் உள்ளன. 274 பாடல் பெற்ற சிவஸ்தலங்களுக்குச் செல்லும் வழிவிவரம், திருவிழாச் சிறப்பு, கல்வெட்டுக் குறிப்பு, ஒவ்வொரு தலத்திற்கும் உள்ள பாடல்களின் குறிப்பு முதலியன எல்லாம் அடங்கிய அருமையான பதிப்பு.

ஒரே வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 7—0—0; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—9—0.

இரண்டு வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 8—0—0; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—10—0.

வி. பி. மூலமாகவும், ரயில்வே பார்சல் மூலமாகவும் அனுப்புவதில்லை.

பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள் அருளிய

**செவியறிவுறூஉ** விலை அணா 3

**சிவஞான தீபம்** விலை அணா 8

தபாற்கூலி வேறு.

கிடைக்குமிடம்:—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்**, பி.ஏ., பி.எல்.,
திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை—1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14